செய்தி வெளியீடு எண்.288 நாள்: 5.6.2009

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் பள்ளிசிறார் கண்ணொளி காப்போம் திட்டத்தின் கீழ் மாணவ, மாணவிகளுக்கு இன்று (5.6.2009) தலைமைச் செயலகத்தில், கண் கண்ணாடிகளை, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

மாணவ, மாணவிகளுக்கு கண் கண்ணாடிகளை வழங்கி மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கூறியதாவது:

குழந்தைகளுக்கு ஏற்படும் கண் பார்வை குறைபாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையும், பார்வை குறைபாடுகள் தான் குழந்தைகளின் கண் பார்வை இழப்பிற்கு முக்கிய காரணமாக இருக்கிறது என்பதையும், அதன் காரணமாக மாணவ, மாணவிகள் கல்வியில் முழு கவனம் செலுத்த முடியாத நிலை, செயல்திறன் குறைவு போன்ற பின்விளைவுகள் ஏற்படுகின்றன என்பதையும் அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாணவ, மாணவியர்களின் கண்பார்வை குறைபாடுகளை இளம் வயதிலேயே சரிசெய்வதுதான் முறையானது என்று கருதி, அதற்கு தீர்வு காண கண் கண்ணாடிகளை மாணவ, மாணவியர்களுக்கு வழங்குவது தான் சிறப்பான வழிமுறையாகும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இத்திட்டத்தினை 2009–2010 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிமுகப்படுத்தினார்.

இத்திட்டம் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான 3.6.2009 நாள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக, அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6, 7 மற்றும் 8ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவ, மாணவியர்களின் கண் குறைபாடுகளை கண்டறிந்து அதற்குரிய சிகிச்சை வழங்கப்படும். இத்திட்டத்திற்காக 5 கோடியே, 38 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இத்திட்டத்தின் மூலம் சுமார் 24 இலட்சம் மாணவ, மாணவியர்கள் பயன் பெறுவார்கள். ஏறத்தாழ 2 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கண் கண்ணாடிகள் வழங்கப்படும்.**

**அனைத்து பள்ளிகளிலும் தலா ஒரு ஆசிரியர்க்கு கண் பார்வை குறைபாடுகள் உள்ள மாணவ, மாணவியர்களை கண்டறிய தேவையான பயிற்சிகள் அரசு கண் மருத்துவ உதவியாளர்களால் அளிக்கப்படும். ஆசிரியர்களால் கண்டறியப்படும் கண் குறைபாடுகள் உள்ள மாணவ, மாணவியர்களுக்கு, அரசு கண் மருத்துவ உதவியாளர்களால் பரிசோதிக்கப்பட்டு கண் கண்ணாடிகள் வழங்கப்படும். நகர்புற பள்ளிகளில் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலமும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.**

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், சுகாதாரத்துறை முதன்மைச் செயலாளர் திரு. வி.கே. சுப்புராஜ், இ.ஆ.ப., ஊரக நல வாரிய இயக்கக குழும இயக்குநர் திருமதி. கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., பொது சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் எஸ். இளங்கோ மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–9.